**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC No.309/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பூமுருகன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :செல்லம் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

05.02.2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் கீழத்துவல் காவல்நிலையத்தில் தலைமைக்காவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.10.2024 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் வேலுச்சாமி என்பவரது தலைமையில் நானும், இரண்டாம்நிலைக்காவலர் மணிகண்டன் என்பவரும் சட்டஒழுங்கு மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக திருவரங்கம் சுடுகாடு அருகே ரோந்து சென்றபோது சுடுகாடு அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த இருநபர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் தங்களது பெயர் சதக்கத்துல்லா மற்றும் மாரிமுத்து என்றும் மற்றும் விலாசத்தையும் கூறினார்கள். அவர்களுக்கு அருகே ஒரு வெள்ளைசாக்கு மூட்டை இருந்தது. அதை போலிசார் ஆகிய நாங்கள் சோதனையிட்டபோது தலா 180ML அளவுள்ள 25 Monitor பிராண்டி பாட்டில்கள் இருந்தன. அதுகுறித்து எதிரிகளிடம் சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது அவைகளை சட்டவிரோதமாக விற்பதாக கூறினார்கள். எனவே, அந்த மதுபாட்டில்களை எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி மகஜர் தயார் செய்தார். அந்த மகசரில் நானும், மணிகண்டன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள**

**முதலாவது சாட்சி கையொப்பம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகள் இருவரையும் சார்பு ஆய்வாளர் கைது செய்து நிலையம் அழைத்து சென்று அவர்கள் மீது குற்ற எண்.155/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். அவருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். சாட்சி மீண்டும் தேதியை தவறுதலாக கூறிவிட்டதாகவும் 12.10.2024 ம் தேதி ரோந்திற்கு சென்றதாகவும் கூறினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் கைது செய்த எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்மந்தமாக தனிநபர் யாரும் நிலையத்திற்கு தகவல் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் நான் தேதியை சரியாக கூறியிருப்பேன் என்றாலும் பொய்யாக புனையப்பட்ட கதை என்பதால் தான் நான் தேதியை மாற்றி மாற்றி முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் அழைத்தன்பேரில் நானும், காவலர் மணிகண்டன் என்பவரும் ரோந்திற்கு சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடத்திற்கு அருகே மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். தமிழ்நாடு அரசு வழிக்காட்டுதலின்படி கிராமப்புறங்களில் டாஸ்மார்க் கடை மதியம் 12.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை மட்டுமே திறந்து இருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் கைப்பற்றியதாக சொல்லப்படுகிற பாட்டில்களில் உள்ள பானமானது மதுபானமா என்பதை அறிந்துகொள்ளும் விதமாக வல்லுநரின் கருத்திற்கு மாதிரி எடுத்து அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரிந்தவரை சார்பு ஆய்வாளர் அனுப்பவில்லை.

நான் கீழத்தூவல் காவல்நிலையத்தில் 3 வருடமாக தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். நாங்கள் அன்றைய தினம் ரோந்து சென்று எதிரிகளை பிடித்ததாக சொல்லப்படுகிற இடத்திற்கும் ஒயின்ஷாப்பிற்கும் இடயே அரைபர்லான் தொலைவு தான் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் பொதுமக்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் யாரும் முன்வரவில்லை என்பதால் எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அவ்வாறு சார்பு ஆய்வாளர் யார் யாரை அழைத்தார் என்ற

விபரத்தை சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். எனவே, நான் சொல்வதுபோல அன்றைய தினம் பொதுமக்கள் யாரையும் சார்பு ஆய்வாளர் சாட்சிகளாக அழைக்கவில்லை என்றாலும், அவ்வாறு அழைத்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் பாட்டில்கள் கைப்பப்பட்டதாக சொல்லப்படுகிற நிலையில் அதை வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்பதால் தான் வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.எதிரிகள் மீது புள்ளிவிபர கணக்கிற்காக சார்பு ஆய்வாளர் வழக்கிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC No.309/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : மணிகண்டன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கெங்காதரன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

05.02.2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் கீழத்துவல் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.10.2024 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் வேலுச்சாமி என்பவரது தலைமையில் நானும், அசா.1 ம் சட்டஒழுங்கு மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக திருவரங்கம் சுடுகாடு அருகே ரோந்து சென்றபோது சுடுகாடு அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த இருநபர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் தங்களது பெயர் சதக்கத்துல்லா மற்றும் மாரிமுத்து என்றும் மற்றும் விலாசத்தையும் கூறினார்கள். அவர்களுக்கு அருகே ஒரு வெள்ளைசாக்கு மூட்டை இருந்தது. அதை போலிசார் ஆகிய நாங்கள் சோதனையிட்டபோது தலா 180ML அளவுள்ள 25 Monitor பிராண்டி பாட்டில்கள் இருந்தன. அதுகுறித்து எதிரிகளிடம் சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது அவைகளை சட்டவிரோதமாக விற்பதாக கூறினார்கள். எனவே, அந்த மதுபாட்டில்களை எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி மகஜர் தயார் செய்தார். அந்த மகசரில் நானும், மணிகண்டன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம்**

**அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகள் இருவரையும் சார்பு ஆய்வாளர் கைது செய்து நிலையம் அழைத்து சென்று அவர்கள் மீது குற்ற எண்.155/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்தார். அவருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் கைது செய்த எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்மந்தமாக தனிநபர் யாரும் நிலையத்திற்கு தகவல் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் நான் தேதியை சரியாக கூறியிருப்பேன் என்றாலும் பொய்யாக புனையப்பட்ட கதை என்பதால் தான் நான் தேதியை மாற்றி மாற்றி முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் அழைத்தன்பேரில் நானும், அசா.1ம் ரோந்திற்கு சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடத்திற்கு அருகே மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். தமிழ்நாடு அரசு வழிக்காட்டுதலின்படி கிராமப்புறங்களில் டாஸ்மார்க் கடை மதியம் 12.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை மட்டுமே திறந்து இருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் கைப்பற்றியதாக சொல்லப்படுகிற பாட்டில்களில் உள்ள பானமானது மதுபானமா என்பதை அறிந்துகொள்ளும் விதமாக வல்லுநரின் கருத்திற்கு மாதிரி எடுத்து அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரிந்தவரை சார்பு ஆய்வாளர் அனுப்பவில்லை.

நாங்கள் அன்றைய தினம் ரோந்து சென்று எதிரிகளை பிடித்ததாக சொல்லப்படுகிற இடத்திற்கும் ஒயின்ஷாப்பிற்கும் இடயே அரைபர்லான் தொலைவு தான் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் பொதுமக்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் யாரும் முன்வரவில்லை என்பதால் எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அவ்வாறு சார்பு ஆய்வாளர் யார் யாரை அழைத்தார் என்ற விபரத்தை சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். எனவே, நான் சொல்வதுபோல அன்றைய தினம் பொதுமக்கள் யாரையும் சார்பு ஆய்வாளர் சாட்சிகளாக அழைக்கவில்லை என்றாலும், அவ்வாறு அழைத்திருந்தால்

உண்மை நிலவரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் பாட்டில்கள் கைப்பப்பட்டதாக சொல்லப்படுகிற நிலையில் அதை வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்பதால் தான் வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது புள்ளிவிபர கணக்கிற்காக சார்பு ஆய்வாளர் வழக்கிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.